
உளி 9 | ஓசை 1 | ஆகஸ்ட்-செப்டம்பர் 2025 | திங்களிதழ்

படைப்பு
சமூகத்தின் இணைப்பு

www.padaippu.com

# கல்வெட்டு

## கவிதை மின்னிதழ்



அரசு பதிவு எண்: 521/2018

நிறுவனர் & ஆசிரியர்:
ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு:
சகா (சலீம் கான்)
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு:
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி:
பிரபுசங்கர் க
ஷெண்பா
தி.கலையரசி

வடிவமைப்பு:
தேவம் ஆரோன்

இணையதள முகவரி:
padaippu.com

அலுவலக முகவரி:
படைப்பு குழுமம்
8, மதுரை வீரன் நகர்,
கூத்தப்பாக்கம்,
கடலூர் 607 002

படைப்பு பிரைவேட் லிமிடெட்
3, தரைத்தளம், அஜந்தா டவர்ஸ்,
கார்ப்பரேஷன் காலனி தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை 600 024

admin@padaippu.com
+91 73388 97788

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வு செய்யப்பட்டவை.
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வரவேண்டுமெனில் முகநூல் படைப்புக் குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

மெஹறாஜ்பேகம் ........ 04
கௌ.அஸ்வின் பிரபு ........ 05
தனபாலன் தர்ஷன் ........ 05
ஐ.தர்மசிங் ........ 06
தி.கலையரசி ........ 07
நயினார் ........ 08
ஜோதிசரண் ........ 08
வி.வி.கலைச் செல்வி ........ 10
ஜெய் வினாயகராஜா. ........ 10
பாத்திமா சுமையா ........ 11
சேஹு மொஹம்மது பெனாஸிரா ........ 12
தங்கேஸ் ........ 13
கா.வெங்கடேஸ்வரன் ........ 13
லாஸ்யா ........ 14
பிரபுசங்கர் க ........ 14
ச.ஆனந்தகுமார் ........ 15
ஜெயா முருகன் ........ 16
மலர்மைந்தன் ........ 17
க.போ.சுருளிஆண்டவர் ........ 17
ஆர்க்காடு ராஜா முகம்மது ........ 18
ச. இராஜ்குமார் ........ 18
சிவசபாபதி பழனிசாமி ........ 18
ஆ.சார்லஸ் ........ 19
சத்யா பிரான்சிஸ் ........ 20
கோ. சிவா தமிழ் ........ 21
மகேஷ் ........ 21
சுபி ........ 22
அ.சீனிவாசன்.. ........ 22
கயல். ........ 23
தமீம்.அசாருதீன். ........ 23
விவேகவெளி தமிழேந்திரன்(வெல்லபதியான்). ........ 24
சே கார்கவி கார்த்திக். ........ 25
ரகுநாத் வ. ........ 25
சீ. பாஸ்கர். ........ 25
தமிழ்ச்செல்வன். ........ 26
இரா மதிபாலா. ........ 26
வசந்தரா ........ 27
ஹிதாயத். ........ 27
கவிஞர் பொன்.இளையகுமார். ........ 28
ஜெகன் மா ஆன்டணி. ........ 28
அன்பழகன். ஜி. ........ 29
ராம். ........ 29
நிஷா ராஜேஷ். ........ 30
மகா செல்வம். ........ 31
தூரிகை. ........ 31
பி. ஹேமா ........ 32
ஆ.விஜயலெட்சுமி ........ 33
ஜானகிகணேசன், மதுராந்தகம் ........ 33
சுப்பு அழகேசன் ........ 34
கீதாகபிலன் ........ 35
தா.பிரபு பாரதி ........ 35
இரா. கீத்தவாணி ........ 35
மு.முபாரக். ........ 36
இரமணி. ........ 37
மேகலா செந்தில் குமார். ........ 37
பஹ்ரியாபாயிஸ் ........ 37
ரிஸ்கா முக்தார் ........ 39



அழ வைத்துவிட்டு
பின் வருந்தி
என்னை தேற்ற நினைக்காதவர்களைத்தான்
நான் தேடித் தேடி அன்பு செய்திருக்கிறேன்
என்றே
இத்தனை நாளும்
நினைத்துக் கொண்டிருந்தேன் இல்லவே இல்லை
என் காயங்களை
யாதொருவரும்
கண்டு கொள்ளாத வகையில் நானாகவே
சடுதியில்
புன்னகைத்து விடுகிறேன்
என்பதை அறியாதவளாக

மெஹறாஜ்பேகம்



ஆலயம் சென்றிருந்த
அந்த ஒரு நாளில்
சவுக்கை எடுக்காமல்
பாழும் வணிகத்தைச்
சற்றே சகித்துப் போயிருந்தால்
இன்னும் கொஞ்ச காலம்
இருந்திருப்பார் தேவகுமாரன்...!

கௌ.அஸ்வின் பிரபு

ஒருவர் மீது
இறக்கும் வரை
கல்லெறிகிறோம்
இறந்தபின்
அவரது நினைவு நாளில்
பூ எறிகிறோம்...!

தனபாலன் தர்ஷன்



அவன்
கதறி அழுத
ஒரு பொழுதில்
பசியின் வலியோடு
பாலூட்டிய நினைவும்

அவன்
தடுமாறி விழுந்த
ஒரு பொழுதில்
மடியில் சாயவைத்து
தலை கோதிய நினைவும்

அவன்
தூக்கம் வராமல்
துவண்ட ஒரு பொழுதில்
கட்டிய சேலையை தொட்டிலாக்கி
தாலாட்டுப் பாடிய நினைவும்

அவன்
நோயின் கரங்களில் சிக்கி
சுவாசிக்கத் திணறிய
ஒரு பொழுதில்
மார்போடு அணைத்து
மருத்துவரிடம் ஓடிய
நடு இரவின் நினைவும்

அவன்
கல்விக் கடனுக்காக
தாலிக்கொடிக்குப் பதிலாக
மஞ்சள் கயிற்றில்
தனக்குத்தானே
தாலிக்கட்டிக்கொண்ட
கண்ணீர் பொழுதின் நினைவும்
பொட்டலமாகக் கிடந்த

அந்த கையறு நிலையில்
வரிசையாக
அவள் கண்முன்னே
வந்து போயிருக்கும்

மகிழ்வுந்திலிருந்து
துணைவியின் தணையோடு
சாலையோரத்தில்
தாயை இறக்கி வைத்த
அந்த மகனுக்குத்தான்
எல்லாம்
மறந்து போயிருக்கும்

அந்திமக்காலத்தில்
அவனுக்காக
ஒரு சாலையோரம்
ஆயத்தமாக இருக்காது என்பது
என்ன நிச்சயம்.

ஐ.தர்மசிங்



உன்னைப் போலவே
வெயிலை ஆற்றுப்படுத்தித்
தூறலைப் பதப்படுத்தத்
தெரிந்திருக்கிறது அந்திக்கு

உன்னைப் போலவே
இலகுவாக
புறத்தைக் காட்டி
அகத்தைத் திறக்கிறது
பேருந்தின் சன்னல்

உன்னைப் போலவே
கண்டுணரும் முன்பே கலையும் கனவாக
காட்சிகள்
கண்களுக்கு முத்தமிட்டுப்
பின்னோக்கிப் பறக்கின்றன

உன்னைப் போலவே
சக்கரங்கள்
மேடு பள்ளங்களில்
ஞாபகங்களைப் பத்திரமாகச் சுமந்து
காலத்தைச் சுழற்றுகின்றன

உன்னைப் போலவே
ஒலிக்கும் பாடல்களில்
இன்பம் எய்தும் காதுகள்
ஒலியற்றதிலும் இசையை
உணர்கின்றன

மொத்தமும்
உன்னைப் போலவே திகழ்வதாலோ
என்னவோ
உன் கரையாத வாசங்களில்
நீள்கிறது பயணம்

குறுக்கும் நெடுக்குமாகப்
பாதை எங்கிலும்
பூத்துக் குலுங்குகிறது
நீ எனும் உயிர்க்காடு

தி.கலையரசி



பசியை வரைந்தான்
கடவுள் தெரிந்ததும்
வணங்கின சில்லறைகள்
•
என்றோ விழுந்த மழைத்துளிகளைக்
கயிறு கட்டி இழுக்கிறார்கள்
பொதுக் கிணறு
•
நதியின் நீளத்தை
யார் அளக்கச் சொன்னது
உதிர்ந்த சருகு
•
இப்போது தெரிவதில்லை
ஆற்றில் குளிக்கும் நிலா
தாகம் தீர்த்தது சூரியன்
•
தண்ணீரில் மிதந்தபடி
கை நீட்டிச் சிரிக்கிறது
சோளக்காட்டுப் பொம்மை.
•
இன்றும் மாளிகையில்லை
அதே குடிசை வீடுதான்
ஆடிவிட்டுப்போனது சாமி.

நயினார்




லட்சுமணக் கோடுகள்
அறிந்தது எல்லாம்
தமையன் சொல்
கீழ்படிதல்

பொய் மானின்
மயக்கங்கள்
சூழ இருப்பவருக்கு
எல்லாம் சிக்கல்

பாதுகை தாங்கிய
சிம்மாசனம் என்றாலும்
ராம ராஜ்யம்
சிறப்பு தானே

ஆரண்யமாக தோன்றும்
அரண்மனையில்
தவிக்கும் ஊர்மிளையின்
பகலிரவுகள் உருண்டு
ஓடுகின்றன காலத்தோடு

ஜோதிசரண்



## காலத்தின் அழுத்தம்

ஊர்க் கிணற்றின்
உள்ளே சுழன்றாடும்
பாதாள சோதியின்
பத்துக் கைகளில்
சிக்கிக்கொண்டு ஒவ்வொன்றாய்
மேலே மேலே வருகிறது
கைதட்டலும் கூச்சலும் நாலாந் தெருவுக்கு எட்டுகிறது..

கட்டங்கடைசியாய்
சேறு பூசிஇற்றுப் போனரோசாப்பூ கலர்
தாவணிதலைநீட்டுகிறது
மெதுவாய் மிக மெதுவாய்.

துர்மரணம் ஒன்று சாட்சியோடு
இருள் அப்பிச்செல்கிறது
எல்லார் முகங்களிலும்
சட்டென்று.
நிம்மதியாகிறது கிணறு
வெகு காலம் கழித்து

வி.வி.கலைச் செல்வி

---

மேலும் அழகாக்கின்றன
மழையை வரவேற்று
ஆலங்கட்டிகள்

அகவை கொண்டாட்டம்
இலைகளை உதிர்த்து
இளம் செடி

தலைகீழாய் நிலவு
தலைநிமிரும் பூமி
பறவைகளின் ஆரவாரம்

அழகு திருடப்பட்டது
வெறுமையான குளம்
தாமரை

மூன்று கண் சுழலுகிறது
இரண்டு கைகளில்
நுங்கு வண்டி

ஜெய் வினாயகராஜா



தயக்கங்களுடன்
காலம் தாழ்த்திக் கொண்டு
பின்னடைவதில் பலனில்லை

விமர்சனங்களை
காதில் வாங்கிக் கொண்டு
தாழ்ந்து போவதில் இலாபமில்லை

முயற்சியின்மைக்கு
காரணம் கற்பித்துக் கொண்டு
விதியை பலிப்பதில் நியாயமில்லை

அடியேன் கொடுத்து வைத்தது
அவ்வளவு தானென்று பேச்சுக்கு
அளந்து விடுவதில் மதிப்பில்லை

முன்னேறுவதற்கு தேவை .....

தோல்விகளின் வலியுடன்
சளைக்காமல் எழுந்து நிற்றல்
ஆயிரம் சவால்களே ஆனாலும்
அமைதியாக எதிர்கொள்ளும் துணிவு

இன்னும் கொஞ்சம் தூரம் தான்
என்று சொல்லிச் சொல்லியே
இலக்கை நோக்கி நகர்த்தும் தன்னம்பிக்கை
எனும் உந்து சக்தி!

பாத்திமா சுமையா



ஒரு தனிமை
ஓராயிரம் நினைவுகளை
மீட்ட அவகாசம் தருகிறது

எங்கோ தொலைந்து போன
ஒரு நாளின் ஆழங்களை
ஆவணப் படுத்துகிறது

இதை விட அதையும்
அதைவிட இதையும்
மாறி மாறி நிறுத்துக்
கொள்கிறது

தொலைதூரம் பறந்த
இறகினைத் துறத்தும்
காற்று போல
ஒவ்வொன்றையும்
தொடர்கதையாக்க
இத்தனை மௌனம்

அடர்ந்த காட்டின்
நடுவே ஒலிக்கும்
ஒரு சப்தப்தைப் போல
சில அதட்டல்களும்
அந்தத் தனிமைக்கு உண்டு

உருவம் தொலைத்து உள்ளம்
கருகும் அவஸ்தைகள் பலதிற்கும்
உருவம் கொடுத்து விடுகிறது
சில நேரம் இந்தத் தனிமை

சேஹு மொஹம்மது பெனாஸிரா



மிகச் சிறிய குட்டை ஒன்று இன்னும் வற்றாமல்
இருக்கிறது என்னிடம்
சாகா வரம் பெற்ற மீன்களும் தவளைகளும்
பாம்புகளும் சர்வ சுதந்திரமாக நீந்திக்
குளிக்கின்றன அதற்குள்

இரவானால் நிலாவும் நட்சத்திரங்களும்
பித்துப் பிடித்துப் போய்
வெறித்துப் பார்த்துக் கொண்டேயிருக்கின்றன

நிலா சற்று பொடிப் பொடியாக உதிர்கிறது
ஒரு எரி நட்சத்திரம் தலை குப்புற குதித்து
நீர் சமாதி கொள்கிறது

வெள்ளத்தின் தாலாட்டை
தொலைத்த கூழாங்கற்கள்
தமக்குள் சிணுங்கி கொண்டிருப்பதையும்
ஈரத்தை பிரிந்த மணற் துகள்கள்
வெம்பிக் கொண்டிருப்பதையும்
இரவின் நிசப்தத்தில் காது கொடுத்து கேட்டால்

ஒரு காலத்தில் இங்கே
ஓடிக் கொண்டிருந்த மிகப் பெரிய
ஆற்றை நீங்கள் மறுபடியும்
காணக் கூடும்

தங்கேஸ்

நதிகளில் மீன்கள்
நீந்துவதால் நதிக்கு
வலியில்லையென்று அர்த்தமல்ல
அது அவைகளிடம்
சொல்லத்துணியாத தாய்மை
அவ்வளவுதான்.

கா. வெங்கடேஸ்வரன்.



பூத்துமுடித்த செவ்வாகை மரம்
திருவிழாவுக்குப் பின்னான கோவில் திடல்
தேரோட்டம் முடிந்த வீதி
சலனமற்ற குளம்
நிச்சலன வானம்
நீரற்ற அருவித்தடம்
விடுமுறைநாளின் பள்ளிக்கூடம்
டெலிட்சாட் செய்த வாட்ஸாப் திரை
திருஷ்டிப் பொட்டிடாத குழந்தை
அஞ்சனம் தீட்டாத உன் கண்கள்

லாஸ்யா

யானை பொம்மைகளை
எங்கு பார்த்தாலும்
எப்பாடுபட்டாவது வாங்கி
வரவேற்பறையில் வைப்பது
பாட்டியின் பழக்கம்
இரண்டடி யானைகள் முதல்
குட்டி குட்டி யானைகள் வரை
நிறைய பொம்மைகள்
அலமாரி முழுக்க
நிரம்பியிருக்கும்
யானை என்றால்
அவ்வளவு பிடிக்குமா??
ஆச்சரியம் குறையாமல்
அவளிடம் கேட்டிருக்கிறேன்
யானையை பிடிக்காமல்
கூட இருக்குமா??
இது அவளின் எதிர்கேள்வி
இத்தனை பொம்மைகளை
சேகரித்து வைத்திருந்தாலும்
அவள் சொன்ன கதைகளில்
யானைகள் காட்டுக்குள் மட்டுமே
சுதந்திரமாக சுற்றிக் கொண்டிருந்தன....

பிரபுசங்கர் க



மின்சாரம் வழிந்தோடும்
கம்பி பட்டவுடன்
விசிறப்படும் யாக்கை போலவே மனமிருந்தது..
நம்பிக்கையின் பெயர்
வைத்து துரோகம் இயற்றிய பொழுது..

பனிச்சில்லுகள் மேல் நிற்கையில்
வழிந்தோடும் குருதியின்
ரணத்தை பரிசளித்தது
உள்ளொன்று வைத்து வெளிப்படும்
கானல் சிரிப்பு..

எப்போதும் போல் தீயில்
பொசுக்கி விட்டு அறியாதது போல்
அக்கறை களிம்பு தடவியதில்
இன்னும் பற்றி எரிகிறது
உணர்வுகள்..

ப்ரூட்டசாகவே இருப்பதையறிந்தும்
தாயுமானவனாகவே வருகிறேன் குத்தப்பட்டு
குற்றுயிராக கிடக்கிற
புன்னகையை சுமந்துகொண்டு...

ச.ஆனந்தகுமார்



அவள்
அப்படித்தான்..
வெற்றுக்காகிதமாக.
எதை வேண்டுமோ..
கிறுக்கி கொள்ளலாம்..
எதை வேண்டுமோ..

அழித்து கொள்ளலாம்...
மீண்டும் வெற்றுக்காகிதமாக..
புன்னகைப்பாள்
அவள் அப்படித்தான்....

சுமக்க முடியா பாரங்களை..
சேர்ந்து சுமப்பாள்..
இலகுவான நேரங்களில்.
இல்லாமல் போய்விடுவாள்..
அவள் அப்படித்தான்...

நட்பின் பாலமாக மட்டும்
அவளைத் தெரியும்.பலருக்கு..
நட்பிற்க்கு ஏங்கும்
அவளைத் தெரியாது....
அவள் அப்படித்தான்...

எதையும் தாங்கும் இதயம்..
இல்லாமல் போனது..
எல்லாவற்றிக்கும் ஏங்கும்..
மனசு அவளுடையது
அவள் அப்படித்தான்...

வெற்றுக்காகிதமாக..
வெள்ளேந்தியாக..
அவள் அப்படித்தான்...
அவளின் அவளாக.....

ஜெயா முருகன்



எதிரெதிரே நின்று
போரிட்டு மாண்டவர்களை
ஒரே குவியலாக
அரவணைத்துக் கொண்டு அழுதது
அந்த நெருப்பு

மலர்மைந்தன்

## நதியும்.. நாமும்..

ஒரு நதியைப் போல
வாழப் பழகுவது தானே நம்முடைய தனித்துவம்..

நதி அதன் மூலத்திலிருந்து பெருக்கெடுத்து
வழிந்தோடுகிறது.

நாமும் ஒரு மூலத்திலிருந்து வழிந்து வந்தவர்கள்
தானே..

நதி தன் பயணத்தில் பலவற்றை இழுத்துக்
கொண்டு வருகிறது..
நாமும் பல இன்னல்களை இழுத்துக் கொண்டு
தானே வருகிறோம்.
நதி பல மேடு பள்ளங்களை கடந்து
பயணிக்கிறது..
நாமும் பல வெற்றி தோல்விகளைக் கடந்து
பயணிக்கிறோம்.

நதி சிலவற்றை கரையேற்றி விடுவதைப் போல..
நமக்கும் இங்கே சில கடமைகள் உண்டு.
நம்முடைய பாவங்களை நதியில் விடுகிறோம்.
நதி தன் பாவங்களை
கடலில் சேர்க்கிறது.

கடல் கடவுளைப் போல எல்லாவற்றையும் ஏற்றுக்
கொள்கிறது.

க.போ.சுருளிஆண்டவர்



## இந்த மழை நாளில்

கூரை வீடும்
ஓட்டு வீடும்
மாடி வீடும்
கோபுரங்களும்
ஒன்றாகவே நனைந்தன

வந்த பெருமழை
தந்த பெருமையில்
கந்தனுடன் கமாலும்
கரங்கள் கோர்த்தனர்..!

கருணை மழையால்
மடிந்து போன
மனிதம் எல்லாம்
மறுபடியும் துளிர்த்தன..!

மழை மதங்களுக்காக அல்ல
மனிதத்துக்காகப் பொழிவது

ஆர்க்காடு ராஜா முகம்மது

தியானத்தில் அமர்ந்து
மூச்சுக் காற்றை
உள்ளே இழுத்து வெளி விடுகிறேன் .
இப்போது நான் எங்கே?

ச. இராஜ்குமார்

இனி ஆறடி நிலமும்
சொந்தமில்லை

எல்லாம் ஒரு கைப்பிடி
சாம்பலுக்குள் அடங்க,

ஊர் ஊருக்கு
மின்சார மயானம்.

சிவசபாபதி பழனிசாமி



## சற்றே விலகியிருங்கள்

நீங்கள்
வரைந்து கொண்ட,
நேர்கோடுகளுக்குள் - எங்களை
வாழ நிர்ப்பந்திக்காதீர்கள்.

நீங்கள் இசைக்கும்
இசைக் கருவிகளின்,
தாள நயயத்தோடு-நாங்கள்
ஆடிட எதிர்பார்க்காதீர்கள்.

உங்களின்
தலையசைப்பிற்கேற்ப,
எங்களின் தலையசைப்பும்
இருக்கவேண்டுமென,
நினைக்காதிருங்கள்.

எங்கள் வாழ்க்கையின்
வரையரையை-நீங்கள்
கட்டமைக்க வேண்டாம்.

எங்களை விட்டு
சற்றே ஒதுங்கியிருங்கள்.

எங்களின் வாழ்க்கை
எங்களுக்குமட்டுமேயானது.
நாங்கள்
வாழ்ந்துகொள்கிறோம்,
எங்களின் வாழ்க்கையை.

சற்றே விலகியிருங்கள்.

ஆ.சார்லஸ்.



# இலைகள் விழும் நேரம்

இலை மழலை விழுகையில்
தாய் செடி அழுவதில்லை,
வெயிலில் வாடும்
மழையில் நனையும்
புதையல் சுமக்கும் புதுப் பசுமை
மீண்டும் கருக் கொள்ளும்..

துன்பம் ஒரு கால வரிசை
வேதனை ஒரு பனித்துளி
மனதின் முளை வட்டம்
வேராக மாறும் பொழுது
வாழ்க்கையில்
வளரும் மரமாய் நீ..

அழாமல்
மன அழுத்தங்களை அழகு செய்
மரத்தின் மீதுள்ள
இலை போல
உன் நம்பிக்கை
மீண்டும் கிளைக்கச் செய்.
வீழ்வதில்லை

நம் வாழ்வின் மரம்,
அது புது இலைகளைப்
பெறும் சுழற்சி
வலி வந்தால்
ஓடி மறைய வேண்டாம்
அதை நெறியாக்கி
நெஞ்சில் நிலை நிறுத்து!

சத்யா பிரான்சிஸ்



மழையில் நனைந்து குடை வாங்குபவர்களும்
மழையில் நனைந்தபடியே குடை விற்பவர்களும்
கூடவே மழையும் அழகு

கோ. சிவா தமிழ்

மறைத்துக் கொள்வதற்கு
இலைகளே இல்லை
வேறு என்ன தான்
செய்ய முடியுமிந்த மரத்தால்
வேறு வழியின்றி
கிளைகளில் அமர்ந்து
கூவும் குயிலை
எல்லாருக்கும் காட்சிப்படுத்தி விடுகிறது

மகேஷ் சி.பி.



நீர் விட்டு உரமேற்றி
மலர்ந்து காயாகி கனியாகா
பட்ட மரத்தின் வேரொட்டி
நின்று கொண்டு இருக்கிறார்கள்
அவர்கள் இருவரும்

நிலம் பார்த்து நடவில்லை
என்பதைத் தவிர வேறெந்த
குற்றமும் இல்லை

கிளை பரப்பி
நிழலளிக்கலாமென கனவுகண்டு
ஆழங்கண்டு விட்ட
வேரால் வேறென்ன செய்ய முடியும்?

எங்கேனும் சந்திக்க நேரும்
ஒரு நிமிடத்தில்
“நல்லா இருக்கியா?”
என்ற ஒற்றைக் கேள்வி போதும்!

மிச்சமிருக்கும் வாழ்வை
எப்படியும் நகர்த்திக் கொள்ளலாம்!!

சுபி

## அப்பாவின் வீடு

அப்பாவோடு முடங்கி விட்டன
அந்த வண்டி,
மணி நாய்,
கைத்தடி,
கருப்புக்கோட்டு,
பெரிய கேட்டுக்கதவு,
வராண்டா பெரிய பல்புஷெ
அப்புறம்...
அம்மாவின் கால்கள்.

அ.சீனிவாசன்



## நினைவுகள்

எத்தனை புத்தாக்கம் கண்டாலும்
இப்போதும் கனவுகளில் நிறைவது
என் கனவுக்கு தீனியிட்ட
இச்சிதைந்த வீடு!

அப்பாவின் உழைப்பில்
அம்மாவின் சிக்கனத்தில்
கணக்கிட்டு வாழ்ந்து
கடனின்றி பிழைத்து
தவணைகளில் சிக்காமல்
படுத்தவுடன் உறங்கி
பகட்டின்றி பண்போடு
(பற)வசித்த இவ்வீடே
நினைவுகளை நிறைக்க..

இன்றோ
கௌரவமென்று கடன்பட்டு
வசதிகள் பெருகிடினும்
வீடுகள் கட்டிடமாகவும்
வசிப்பிடம் இருப்பிடமாகவே
ஏனோ உருத்துகிறது!!

கயல்

காலம் காலமாய் பெண்களின்
கண்கள் பேச

ஆண்களின் கண்கள்
கேட்டுக்கொண்டே
இருக்கிறது!

இங்கு தான் பக்தன்
கல்லாகிறான்
சாமி பேசுகிறது!

தமீம்.அசாருதீன்



துளிப்பாக்கள்
வற்றியதும்
வடிவாக இருக்கிறது
கொக்குகளால் குளம்
*
வாடியதும்
வணக்கம் செலுத்துகிறது
பூமாதேவிக்குச் செடி
*
வெட்டியதும்
வடியத் தொடங்குகிறது
இறப்பர்ப் பால்
*
ஒட்டியதும்
மீண்டும் உயிர்பெறுகிறது
உடைந்த கால்
*
கழட்டியதும்
இரத்தம் வடி(க்)கிறது
காயப்பட்ட காது
*
தொற்றியதும்
தொகை தொகையாக அழிக்கிறது
உயிர்கொல்லி நோய்
*
முற்றியதும்
அதிக இனிமை தருகிறது
உண்மைக் காதல்

விவேகவெளி தமிழேந்திரன்
(வெல்லபதியான்)



வறுமையின் வயிற்றில்
வரிகள்
கவிதை புனையத் தொடங்கியது
படித்து முடிப்பதற்குள்
சுருங்கத் தொடங்கியது பசி

சே கார்கவி கார்த்திக்

மரப்பலகையில்
கூண்டு செய்தனர்
வளரத்தயங்குகிறது
செடி.

ரகுநாத் வ

## அம்மா இல்லாத வீடு

அலுவலகத்தில் இருந்தபடியே
அப்பா ஆர்டர் செய்த
அறுசுவை உணவில்
அனைத்துமிருந்தும்
தேடுகிறது குழந்தை
அம்மாவின் அன்பை

சீ. பாஸ்கர்



தாத்தாவின்
வானொலி பெட்டியில்
எப்போதும்
மென் இரைச்சல்
கேட்டுக்கொண்டே இருக்கும்

பேரன்
நவீன ஒலிக்கருவியை
வாங்கிக்கொடுத்தான்
இரைச்சல்
இல்லாத சங்கீதம் கேட்டது

தாத்தாவின் முகத்தில் சோகம்
வானொலி இரைச்சலும்
பழைய நினைவுகளும்
பிரிந்து சென்றதால்

கவலை.
மீண்டும்
பழைய வானொலிக்கே
மாறினார் தாத்தா.

தமிழ்ச்செல்வன்

ஓராயிரம் பொழுதுகளில்
விளைந்த காதல் கனிந்து
விதைகள் முதிர்ந்த போது
கால அறுவடையில்
வெவ்வேறு
கூடைகளில் விழுந்தோம்.

ருசிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.
அவரவருக்கு வாய்த்த
உறவுகளிடையே
உப்பு தடவியும்..
சாக்கரை தடவியும்...
சில சமயங்களில்
வெறுமெனவேவும்....

இரா மதிபாலா.



எதுவாக இருந்தாலும்
பார்த்துக் கொள்ளலாம்
இப்போது
நீ ஒரு அல்லிப்பூவைப் போல
சிரித்துக் கொண்டிரு போதும்!
என்பதெல்லாம்
எவ்வளவு பெரிய வாழ்வு.....

வசந்தரா

அன்பு கொண்டதாய்ச் சொன்ன சிலரென்னைக்
கைவிட்ட போது

அவர்களெனக்கு யாராக இருந்தார்களென்பதிலும்

எது அன்பென்பதிலும் பெருங்குழப்பம் இருந்தது

கொஞ்சம் நம்பிக்கையும் இருந்தது

நீ ஆறுதலாய் என் கரம் பற்றினாய்
தலை கோதினாய் அணைத்துக் கொண்டாய்

நீ என்னைக் கைவிட்ட போது தான் இவ்வுலகே
என்னைக் கைவிட்டதாய்த் தோன்றியது

இப்போதும் நீ எனக்கு யாராக இருக்கிறா
யென்பதையும்

உன்னன்பின் தூய்மையையும் உணரும்
போதெல்லாம் எழும் என்னுள்ளத் தகிப்பை எப்படி
நானுனக்கு உணர வைப்பேன்

அற்புதங்கள் எப்போதும் நிகரற்றவை
என் அற்புதமே.

ஹிதாயத்



என் கற்பனைகளுக்கு
கால்கள் போய்
சக்கரம் வந்தது
அஃதும் போய்
இறகுகள் கிடைத்தது !

எல்லாம் மாற்றத்திற்கு
உட்பட்டது தானே என்கிறது
இந்த சமூக நாகரீகம் !

என் தாயன்பாய் இன்னுமும்
அப்படியே இருக்கிறது
காலடியில் மண் மட்டுமே!

மனிதர்கள் மாறலாம்
மாற்ற துடிப்பது தகுமோ ?
என்னையும்..
உன்னையும் மட்டுமல்ல
வின்னையும் மண்ணையுமே !

கவிஞர் பொன்.இளையகுமார்

இரயிலே தாமதமாக வா!
இன்னும் போணி முடியவில்லை
நுங்கு விற்கும் சிறுவனுக்கு.

ஜெகன் மா ஆன்டணி



குருவிக் கூண்டு ஒன்றை
வைத்துள்ளேன் நான்.
கடுங்காற்று, புயல், மழை
வரும் நேரம் பறவைகள்.
புகுந்து கொள்ள வசதியான
திறந்த கூண்டு அது.
எப்பொழுதேனும் ஏதேனும்
சிற்சில பறவைகள்
ஆயிரம் ஆகாயங்கள் சூழ
அதனுள்ளே தஞ்சமாகும்
கூண்டைக் காலி செய்கையில்
மழை மேகங்கள் என் வானை
நிரப்பிக் கொண்டிருக்கும்.

அன்பழகன். ஜி

வெற்றுத்தாளை நிரப்பியது
நினைவுகள்
எழுதி உயிர்ப்பிக்கிறான் கவிஞன்.

ராம்



விழுமியங்களை தொலைத்த
விதியெல்லோ இதுவென
எண்ணமதின் சலிப்பின்
அலகை அங்குமிங்கும்
அசைத்தபடி..!

அகல் ஏந்திய தீபக் குழியில் மீண்டுமொருமுறை
எண்ணையின் பற்றாக்குறையை
சரிபார்த்தபடியே.!

என் பிரார்த்தனையில்
வெகுவென சேர்ந்த
மனச் சுமையை சற்றே
இலகுவாக்கிட
கடுகளவும் சுணக்கமின்றியே
விருப்ப மனுவொன்றை
கையளிக்கிறேன்..!
கையகப் படுத்திய
கருணை மனுவோ
காரணமின்றிய

நிராகரிப்பின்
நிதர்சன படிவத்தில்
கையொப்பமிட்டு
விசம பூங்கொத்துக்களை கையளிக்கையில்
பாசாங்கு பேரன்பும் இங்கு
பல்லிளிக்கிறது..!

நிஷா ராஜேஷ்



பார்வையற்றவரிடம்
வாங்கிய ஊதுபத்தியை
பற்ற வைக்கும் போதெல்லாம்
நினைவில் கமழ்கிறது....

அவரைக் கைப்பிடித்து
அழைத்து வந்து
பத்தி வாங்கும்போது
நன்றி நவில்ந்த
அச்சின்னஞ்சிறு
சிறுமியின் பூமுகம்!

இன்னுமிரண்டுக் கட்டு பத்திகள்
சேர்த்து வாங்கி இருக்கலாம்! நிலுவையில்
நில்லாமல்...
இன்னுமிரண்டு வாரங்கள்
நீடித்திருக்குமே?
என் மனிதநேயக் கடன்!

நான் வாங்காததால் நீட்டிப்பானது ...
என் கவி வரிகளின்
கடைசி பத்தி மட்டுமே!

மகா செல்வம்

ஓயாமல் அழும் இரவின்
தனிமைக்கு
குடை பிடிக்கிறது
மின்விளக்கு.

தூரிகை



## முரண்

அசுணமாவை முதலில்
யாழை இசைத்து
ஈர்த்து மயக்குவதைப் போலத்தான்

தேன்சுவையேறிற நம்பிக்கை
வார்த்தைகளில் ஈர்த்து
மண ஒப்பந்தம் செய்தார்கள்
அவளுக்கும் அவனுக்கும்

அஞ்சி ஒடுங்கிப் போகும்படியாய்
அதே அசுணமா பறவையை
பறையடித்து உயிரை எடுக்கத்தான்

அவர்கள் முதலில்
யாழை இசைத்தார்கள்
என்பதை தெரிந்துகொண்ட
பின்பும் பேசவில்லை யாவரும்

அவன் பிடுங்கி
அவள் பெருக்கித் தள்ளி
குவித்த அவளின் கனவுகளை

தீயிட்டு சாம்பலாக்கியவன்
அவளையே சாம்பலாக்கிட
எத்தனித்த போதும்
எதுவும் கேட்கவில்லை யாரும்

வாழ்தலின் பொருட்டு
நித்தம் நித்தம்
விஷப்பாம்போடு அவள் செத்துக்
கொண்டிருந்தபோதும்
மடி தரவில்லை யாரும்

இனியும் இந்த
இற்றுப்போன வாழ்க்கை
வேண்டாமென்று

இருக்கிற சொச்ச சிறகுகளோடு
நரக நெருப்பிலிருந்து
தடுமாறி தப்பிப் பிழைத்து
மீண்டெழுந்து வானில் பறக்கும்
ஃபீனிக்ஸ் பறவையான நாளிலிருந்து

சீழ் பிடித்த சமூகம்
சத்தமிட்டுக் கொண்டேயிருக்கிறது
வாழாவெட்டியாம் அவள்

பி. ஹேமா



காடு மலையெல்லாம்
கனவுகளோடு
கடந்து வந்த நதி
பாதி வழியிலேயே
பாலையாகி விடுகிறது...

நீராதாரத்தையே
சேதாரமாக்கி
வறண்டு போக வைப்பதெல்லாம்
மனித குலத்திற்கு மட்டுமே
சாத்தியமான ஒன்று!

ஆ.விஜயலெட்சுமி

முகசுழிப்பை ஏற்படுத்தும் மூத்தர நெடி வாசம்
வீசும் பாதையில் முளைத்த
ரோஜா செடியிலும் தேனீக்கள் தேன்
எடுத்துக்கொண்டு தான் இருக்கின்றன...

ஆரூர்.சிவ.மணிவேல்...
நெகிழிகுடுவையில்
அடைபட்ட தண்ணீர்
கார்பரேட்காரன்
சிறைபிடித்த
நதிப்பெண்!!

ஜானகிகணேசன்,
மதுராந்தகம்



## காதல் என்பது

இரு மனங்கள் எழுதும் புதினம்..!
இரு விழிகள் எழுதும் கணிதம்..!

#காதல்_என்பது_வந்து_விட்டால்
காட்சிகள் யாவும் அழகாகும்

மௌனங்கள் பேசு மொழியாகும்
வார்த்தைகள் யாவும் கவிதைகளாகும் ..!

எல்லா நாட்களும் ஞாயிறாகும்...!
பகலில் சூரியனும் நிலவாகும்...!
அவள்(ன்) இல்லா நேரத்தில்
தேநீர் கூட வேம்பாகும்..!

புன்னகையின் பொருள் புரியும்..!
கிறுக்குவதெல்லாம் ஓவியமாகும்..!

அவள்(ன்) பார்க்கும்
திசையெல்லாம் கிழக்காகும்...!
அவளி(னி)ன் பேச்செல்லாம் இலக்கியமாகும்..!

சதிக்கு கால் முளைத்து
சாதியாகும் போது..!
காதல் என்பது போர்க்களமாகும்..!

மதத்திற்கு மதம் பிடித்தால்
காதல் என்பது சாபமாகும்...

வரமோ..! சாபமோ...!
காதல் என்பது கணிதம்
நல்ல விடை காண்பதே புனிதம்...!

சுப்பு அழகேசன்



நீ அற்ற பொழுதுகளில்
உன் நினைவுகளை
தாங்கிச் சுமக்கும் போது
ததும்பி வழியும் மௌனம்....

கீதாகபிலன்

மரம் வெட்டப்படுவதை/
பார்த்திருக்க வேண்டும்/
மின்கம்பியில் கூடுகட்டும் குருவி.


தா.பிரபு பாரதி

என் இறந்த காலம் எப்போதும்
உழன்றுகொண்டே இருக்கின்றது.
நான் எதிர்காலம் தேடித்திரியும்
சில்வண்டென ஓயாமல்
ரீங்காரித்து கிடக்கின்றேன்.

நீ தூர்ந்து போன நதியின்
வழித்தடமென உறைந்து போனாய்.
என் கைகுட்டைகளில்
அழுந்ததுடைத்து உன்
தடமழிக்க முயல்கின்றேன்.

சமைக்கையில் வெடிக்கும் கடுகின்
வேகம் பிசைந்த என் கோபம்
ஆறிய உணவாய் கேட்பாறற்று
கிடக்கிறது. என் வாழ்வுபசிக்கு
உன் பிரியமே பெருந்தீனி.வந்துவிடு.
வாழ்வின் பசியாற்று.

இரா. கீத்தவாணி



நான்
இன்னும் சாப்பிடவில்லையென,
எப்படி தெரிந்திருக்கும் ...
அலைபேசியில்
தொடர்பு கொண்டு ,
உடனே சாப்பிடு என்கிறாள்,


எனது வேதனைகள்
எப்படி தெரிந்திருக்கும்,
உடனே
தொடர்புகொண்டு
எல்லாம் சரியாயிடும்,
நிம்மதியாய் போய் தூங்கு என்கிறாள்,

போட்டிகளில்
கலந்து கொள்ளலாமா என
சிந்தித்துக் கொண்டிருக்கையில்,
தொடர்புகொண்டு
கலந்துக்கப்பா...
நீ வெற்றி பெறுவாய் என
உற்சாகமூட்டுகிறாள் ,

அவசரமாய் பணம்
தேவைப்படும் போதெல்லாம்,
என்னுடைய பணம் எடுக்கும்
அட்டை,
உன்னிடத்தில் இருக்கிறது...
மறந்துவிடாதே என்கிறாள் ,

எங்கு வாழ்ந்தாலும்,
என்னைப் பற்றியே சிந்தித்து,
எனக்காகவே வாழும் அம்மா
நானாகவே இருக்கிறாள்...
என் வாழ்வின்
எல்லா நாட்களிலும் !

மு.முபாரக்



எதற்காகவேனும்
என்கிற காத்திருப்புகளில்
ஏதோவொரு குழந்தையின்
அழுகுரல் கேட்பதாயிருக்கிறது
தவிர்த்தலற்று
இப்பொழுதெல்லாம்.

இரமணி

சட்டென்று வந்தமர்ந்து
சரசம் புரியும்
பட்டாம்பூச்சிக்கும்
சத்தியமாய்
உன் சாயலே......!

மேகலா செந்தில் குமார்

உங்களைப்பற்றி கவலைப்படாத பொழுது..
நீங்கள் அவர்களைப்பற்றி கவலைப்படுவதில்
அர்த்தம் இல்லை..

உங்களை விட்டு பிரிந்து செல்பவர்களிடம்...
நில்லுங்கள் என்று சொல்லி விடாதீர்கள்..
அதில் எந்த பலனும் இல்லை..

உங்களை நேசிக்காதவர்களை நீங்கள்
நேசிப்பதில்லை எந்த பிரயோசனமும் இல்லை..
நீங்கள் சோர்ந்து போவீர்கள்..

உங்களை மதிக்காதவர்களிடம் மரியாதையை
கேட்டு கெஞ்சாதீர்கள்..
அது அவமரியாதையாக மாறிவிடும்.

பஹ்ரியாபாயிஸ்



நமக்குள் பேசித்தீர்க்க எதுவுமே
இல்லாதிருக்கலாம்
என் மீதான பிரமிப்புகள் இவ்வளவுதானாவென
நீர்த்துப்போயிருக்கலாம்
என் கதைகளில் சுவாரசியங்கள்
குறைந்துபோயிருக்கலாம்

நீ இளைப்பாறும் என் நிழல்கள்
தீர்ந்துக்கொண்டிருக்கலாம்
இதுவே நாம் விடைபெறுவதற்கான
தக்க தருணமென நீ நினைத்திருக்கலாம்

அதனாலென்ன
உன் மனம் விரும்பும் வழியில்
உன் மனம் நிறைந்தவர்களுடன்
உன் மனம் மகிழ
இங்கிருந்து
செல்

நான் உடைந்திடுவேனெனத்
தயங்காதே
என்னைப் பாதிவழியில் விட்டுச்செல்வதற்காய் மனம்
வருந்தாதே
நீ விரும்பும் பாதையில்
உன் விருப்புக்குரியவர்களுடன்
உன் விருப்பம்போல
செல்

உன் கனவுகளையெல்லாம் நனவாக்கிக்கொள்
உன் நட்புவட்டத்தைப் பெரிதாக்கிக்கொள்
உன் வெற்றிகளை உலகோடுப் பகிர்ந்துகொள்
உனக்கான வாழ்வை நீ நினைத்தாற்போலக்
கொண்டாடி
மகிழு

பின்னும்
எப்போதேனும்
ஒருநாளில்
எங்கேனும் நீ தலைகுனிய நேரிட்டாலோ



எதிலேனும் நீ தோற்றுப்போய் திரும்பினாலோ
எவராலும் நீ மறுதலிக்கப்பட்டு மனம்
நொந்தாலோ
எங்கிருந்தேனும் நீ திருப்பியனுப்பப்பட்டாலோ
மிகப்பிடித்ததொன்றை நீ இழந்துப் போனாலோ
தனிமையில் நீ கைவிடப்பட்டு
நின்றாலோ
அல்லது
எதன்பொருட்டு என்னை நீ விட்டுச்செல்கிறாயோ
அதை உன்னால் அடைய முடியாதிருந்தாலோ

அக்கணமே
திரும்பி
வா

பருவம் முடிந்ததும்
கிளை
விட்டுப்பறந்த
பறவைகள்

மீண்டும்
திரும்புகையில்
இடங்கொடுக்க மறுத்திடுமா
மரங்கள்

அதுபோலவே
நானுமுன்னை
மனதார ஏற்றுக்கொள்வேன்

அது தவிர
மரங்களுக்கு வேறு வழியில்லை
சமயங்களில்
எனக்கும்தான்

ரிஸ்கா முக்தார்

படைப்பு
சமூகத்தின் இணைப்பு

# சிறை வாசிகளுக்கு

# புத்தக தானம் செய்வீர்...!



"ஒரு எழுத்து மனிதனின் வாழ்வை மாற்றி அமைக்கும் என்ற உயரியஎண்ணத்தோடு புத்தகங்களை திரட்டிக் கொண்டிருக்கும் சிறைத்துறையின்ஒப்புதலோடு இலக்கிய படைப்பு குழுமம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துசிறைச்சாலை நூலகங்களுக்கும் நூல்களை சேகரித்துக்கொண்டிருக்கிறது."

## புத்தகங்கள் அனுப்ப வேண்டிய முகவரி


**இலக்கிய படைப்பு குழுமம்**

3, அஜந்தா டவர்ஸ், தரைத்தளம், கார்ப்பரேஷன் காலனி தெரு.கோடம்பாக்கம், சென்னை 600 024. Ph: +91 73388 97788

padaippu www.padaippu.com admin@padaippu.com